[1978 மார்ச் 7

திரு. இரா. அருணாசலம்: தனியார் பள்ளிகளில் ஊழல் நடப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. குறிப்பாக, ஆசிரியர்களுக்கு அந்தந்தப் பள்ளிகளின் மேலாளர்கள் ஊதியத்தைக் கொடுக்கும்போது ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு அக்விடன்சில் முழுத் தொகையும் போட்டு கையெழுத்து வாங்குகிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அந்த மாதிரிக் குறைகள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அவற்றைப் பற்றி அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அத்தகைய பள்ளிகளில் நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபடும். ஆயினும் இதுபோன்ற நுணுக்கங்களை எல்லாம் இங்கே பேசுவதன் மூலமாக தெரியாதவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கும் முறையை நாம் உருவாக்க வேண்டாம்.

பரதராமியில் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

*425 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பரதராமியில் உயர்தரப் பாடசாலைக் கட்டடம் கட்டுவதற்காக 2½ ஏக்கர் நிலம் வாங்கப் பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) கட்டடம் கட்டும் வேலை தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) பரதராமி கிராமத்தில் வ. எண். 251-ல் 2.85 ஏக்கரும், வ. எண். 263/1-ல் 0.65 ஏக்கரும் ஆகிய 3½ ஏக்கர் பட்டா நிலங்கள்

1978 மார்ச் 7]

திரு. பாலகிருஷ்ணன் என்பவரிடமிருந்து பள்ளிக் கட்டிடக் குழுவால் கிரயம் கொடுத்து வாங்கப்பட்டு 21—2—61 அன்று விற்பனை சாசனம் பதிவு செய்யப்பட்டது.

(இ) இப்பள்ளிக் கட்டிடம் கட்டும் வேலை எதுவும் நிலுவையில் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: பல ஆண்டுகள் ஆகியும் ஆந்திரா பார்டரில் இருக்கக்கூடிய மிகவும் பின்தங்கி இருக்கக் கூடிய ஒரு பிரதேசத்தில் இருக்கக்கூடிய அந்தப் பாடசாலைக் கட்டடத்திற்காக வேண்டி 3½ ஏக்கர் நிலத்தைக் கொடுத்த பிறகும் அரசு அவர்கள் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு முன்வராத காரணத்தால்தான் அந்த வேலை இப்போது அப்படியே ஸ்தம்பித்து நிற்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, முன் கேள்விக்கு அமைச்சர் பதில் கூறியது போல் இதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு உடனடியாகக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆறு வகுப்பறைகள் கொண்ட கூறைக் கட்டிடத்தை மாற்றி ஆறு வகுப்பறைகள் கொண்ட நிரந்தரக் கட்டடம் கட்டும் நிலை குறித்து மாவட்ட அளவில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: பரிசீலனை இன்னும் எத்தனை வருஷ காலம் நடைபெறும்? இப்போதே பத்து பன்னிரண்டு வகுப்புகள் வெளியிலே மரத்தடியில் நடத்தப்பட்டு வருகிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, உடனடியாகக் கட்டடம் கட்டி அங்கே படிக்கக்கூடிய மாணவர் களுக்கு நல்லது செய்ய உடனடி ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: எதுவுமே விரைவில் நடைபெற வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. ஆனால் பரிசீலனை என்று சொல்லுகிறபோது அதற்குத் தேவையான நேரத்தை எடுத்துக் கொள்வதில் நியாயம் இருக்கிறது. அந்த அளவுக்குக் காலத்தைத்தான் எடுத்துக் கொள்வார்கள்.